ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

ප්‍රාදේශීය සංවර්ධන දෙපාර්තමේන්තුව பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் Regional Development Department
7 වන මහල, අංක 30, ජනාධිපති මාවත, 7 ஆம் மாடி,இல.30 சனாதிபதி மாவத்தை கொழும்பு 1 Level 7 , No. 30, Janadhipathi Mawatha, Colombo 1
තැ . පෙ . 590, කොළඹ 01, ශ්‍රී ලංකාව த.பெ.இல.590,கொழும்பு 01,இலங்கை P.O. Box. 590, Colombo 01, Sri Lanka.
94 11 2477447/437 94 11-2477734 rdd@cbsl.lk www.cbsl.gov.lk

கோவை இல.: 32/04/011/0001/002
2020 நவெம்பர் 06

சேரல்: பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்/ பொது முகாமையாளர்கள்

ஐயா/ அம்மணி,

**சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி: சலுகைக் காலத்தினை நீடித்தல்**

சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் அத்துடன் இது தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அதனைத் தொடர்ந்து வந்த திருத்தங்களுடன் இது தொடர்புடையது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் பாதிக்கப்பட்ட தொழில்களை மறுசீரமைக்கும் தேசிய முக்கியத்துவத்தினை இனங்கண்டு இலங்கை மத்திய வங்கியானது இலங்கை அரசாங்கத்தின் வழிகாட்டலின் கீழ் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களின் முனைப்பான பங்கேற்புடன் சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதியினை நடைமுறைப்படுத்தியது. எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய அண்மைக்கால அபிவிருத்திகள் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு தமது தொழில்களை மறுசீரமைப்புச் செய்வதில் துணைக் கடன்பெறுநர்களில் அநேகமானோர் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் இதனால் அவர்கள் இன்னும் பிழைப்பு மட்டத்திலேயே காணப்படுகின்றனர் என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதி கட்டம் I, II மற்றும் III இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பெறுநர்கள் உயர்ந்தபட்சம் 6 மாத சலுகைக் காலப்பகுதியினை பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடையவர்களாக உள்ளபோதிலும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் இரண்டாம் அலையின் காரணமாக தோன்றிய சாதகமற்ற நிலைமையினைக் கருத்திற்கொண்டு கடன் தவணைக் கொடுப்பனவுகளை மீளச்செலுத்துவதில் அவர்களில் பலர் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே ஏதேனும் தவறின்றி கடன்களை மீளச்செலுத்துவதனை வசதிப்படுத்தி ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கி, சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதியின் கீழ் பதிவுசெய்த கடன்களுக்காக ஏற்புடைய சலுகைக் காலத்தினை மேலும் மூன்று (03) மாதங்களுக்கு நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளது.

ஆதலால், தேசிய குறிக்கோள்களை அடைவதில் பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட மகத்தான ஆதரவினை வரவேற்கின்ற அதேவேளை துணைக் கடன்பெறுநர்களால் மேற்கொள்ளப்படும் எழுத்திலான கோரிக்கையின் மீது சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதியின் கட்டம் I, II மற்றும் III இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட துணைக் கடன்பெறுநர்களுக்கு ஏற்புடைய சலுகைக் காலத்தினை மேலும் மூன்று (03) மாதங்களால் நீடிப்பதற்கு இத்தால் உங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் உங்களுடைய ஒத்துழைப்பை மிகவும் வரவேற்கின்றேன்.

உண்மையுள்ள,

கே.எம். மஹிந்த சிறிவர்தன
துணை ஆளுநர்